**சார்பு நீதிமன்றம், பெருந்துறை**
**MCOP No: 58/2024**

2026-ம் ஆண்டு ஜுலை மாதம் 03 ம் நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | முகமது அமீன் |
| த.க.பெயர் | கோபர்க் காஜி |
| கிராமம் | ஊத்துக்குளி |
| மாவட்டம் | |
| வயது | 27 |

**ம.சா. 1 நாள் 03.07.2026**

**முதல் விசாரணை: (சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்)**

நான் இம்மனுவின் மனுதாரர். என் தரப்பு முதல் விசாரணைக்காக நிருபண ஆணையுறுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியும்.

| | | |
|---|---|---|
| 1. | முதல் தகவல் அறிக்கை | ம.சா.ஆ.1 |
| 2. | மாதிரி வரைபடம் | ம.சா.ஆ.2 |
| 3. | பார்வை மகசர் | ம.சா.ஆ.3 |
| 4. | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை(இரு சக்கர வாகனம்) | ம.சா.ஆ.4 |
| 5. | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை (ஈச்சர் வாகனம்) | ம.சா.ஆ.5 |
| 6. | காயச்சான்றிதழ் | ம.சா.ஆ.6 |
| 7. | இறுதியறிக்கை | ம.சா.ஆ.7 |
| 8. | மருத்துவமனை கட்டண ரசீதுகள் ரூ.198669/- | ம.சா.ஆ.8 |

| | | |
|---|---|---|
| | (ஆட்சேபணையுடன்) | |
| 9. | மருத்துவ விடுவிப்பு சான்று | ம.சா.ஆ.9 |
| 10. | மனுதாரரின் ஆதார் அட்டை | மசாஆ 10 |
| 11 | காப்பீட்டு சான்று | மசாஆ 11 |
| 12 | வாகனத்தின் பதிவு சான்று | மசாஆ 12 |
| 13 | 1 ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் | மசாஆ 13 |
| 14 | மருத்துவக் குழுமத்தினால் வழங்கப்பட்ட ஊனச் சான்று | நீமசாஆ 1 |

மனுவில் கோரியுள்ள பரிகாரம் வழங்கக் கோருகிறேன்.

<u>குறுக்கு விசாரணை ( 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில்)</u>

எனக்கு இரு சக்கர வாகனம் ஓட்ட உரிமம் இல்லை. அந்த வாகனத்திற்கு முறையான பதிவு சான்று மற்றும் தகுதி சான்று இல்லை என்றால் சரியல்ல. முன்னால் சென்ற ஈச்சர் வாகனத்தின் இடது புற டீசல் டேங்கின் மீது மோதி நான் தான் விபத்தை ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல. 1 ம் எதிர்மனுதாரருக்கு விபத்து சமயத்தில் தகுதியான வில்லை இல்லை என்பதால் காப்பீட்டு விதிமீறல் ஏற்பட்டுள்ளது என்றும் எனவே 2 ம் எதிர்மனுதாரர் இழப்பீடு செலுத்த பொறுப்பல்ல என்றால் சரியல்ல. நான் தலைக் கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் குணமடைந்து விட்டது. எனக்கு ஏற்பட்ட எலும்பு முறிவு கூடிவிட்டது என்றால் சரிதான். நான் தொடர் சிகிச்சை எடுத்து வருகிறேன் என்பதை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு நிரந்தர ஊனமோ வருமான இழப்போ ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எனது வருமானம் குறித்த ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. நான் உடல் உபாதைகள் குறித்து சொல்லியுள்ள சங்கதிகள் வழக்கிற்காக மிகைப்படுத்தி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 1 ம் எதிர்மனுதாரர் எனக்கு ஆதரவாக குற்றத்தை ஒப்புக் கொண்டார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் வழக்கிற்காக மிகைப்படுத்தி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மருத்துவ கட்டண

பில்களின் தலைப்புகள் மாறி மாறி உள்ளது என்றும் நான் கோரியுள்ள மருத்துவ கட்டணங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால சரியல்ல. மருத்துவ கட்டணங்களில் மருத்துவரின் மருந்து சீட்டுக்கள் இல்லை என்பதால் மேற்படி கட்டணங்கள் எனக்கு கிடைக்கத்தக்கல்ல என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.07.03 16:07:57 +0530

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS